FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364128

1. District : திருநெல்வேலி PS: அம்பாசமுத்திரம் Year: 2026 FIR No. 04/26 Date: 17/07/2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 16/07/26 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 10.30 hrs Time to :
நேர அளவு நேரம் முதல் மாலை நேரம் வரை
(b) Information Received at PS. Date : 14.00 hrs Time : 08.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17/07/26 நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 09.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 75 கி.மீ வட கிழக்கு திசையில்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உதவி மின்பொறியாளர் அலுவலகம்
Beat Number : (b) Address : மணிமுத்தாறு, திருநெல்வேலி மாவட்டம்.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. ராஜேந்திரகுமார் (b) Father's/ Husband's Name : சிவபெருமாள்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 26/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : கீழ்நிலை பொறியாளர் (g) Address : 81/3, தேர்தல் நகர், பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) எதிரான் மீது மாநில அரசு உதவி மின்பொறியாளர், மணிமுத்தாறு அலுவலகம், மணிமுத்தாறு, திருநெல்வேலி மாவட்டம்.
2) பதிவு செய்யவேண்டும்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 17.07.2026 தேதி 08.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், இலுப்பக்குடி, மாத்தூர், பெரியமாத்தூர், சூர்யா நகர், க.எண்-81/3 என்ற முகவரியில் வசிக்கும் சுப்பிரமணி என்பவரின் மகன் S.ரஞ்சித்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட புதுவயல் EB அலுவலக AE திரு.சையது முகமது பாதுஷா மற்றும் வயர்மேன் திரு.பஞ்சு ஆகியோர்களைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
17/07/2026

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17/07/2026 at 09.35 hrs

Name: பெயர் R. ஜெகதீசன்
Rank: நிலை தலைமை காவலர் எண்.....

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண். 09/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

பெற்று 17.07.2026-ம் தேதி 09.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 09/2026 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, S.ரஞ்சித்குமார், த/பெ.சுப்பிரமணி, க.எண்.81/3, சூர்யாநகர், பெரியமாத்தூர், மாத்தூர், இலுப்பக்குடி, சிவகங்கை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை மாவட்டம். அய்யா, நான் கடந்த 3 ஆண்டுகளாக திருமயத்தில் உள்ள BHEL கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எனது தந்தை திரு.சுப்பிரமணியும், எனது அண்ணன் திரு.பாண்டித்துரையும் வெளிநாட்டில் வேலை செய்து வருகின்றனர். எனது தந்தை பெயரில் மேற்படி முகவரியில் உள்ள புதியதாக கட்டிய வீட்டில் நான் எனது அம்மாவுடன் வசித்து வருகின்றேன். அந்த வீட்டினை கட்டும்போது, கட்டிடம் கட்டுவதற்கான Tariff VI-ல் மின் இணைப்பு வாங்கினோம், அந்தமின் இணைப்பு எண்.4070285596 ஆகும். தற்போது, வீடுகட்டி முடித்து, கடந்த 12.06.2026ம் தேதி வீட்டுவரி செலுத்தி அதற்கான ரசீது வாங்கினேன். எனது தந்தை மேற்படி வீட்டின் மின் இணைப்பின் Tariff-யை குடியிருப்பு பயன்பாட்டிற்கான Tariff ஆக மாற்றுவதற்கான வேலையை செய்யுமாறு என்னிடம் கூறினார். எனவே, நான் கடந்த 06.07.2026ம் தேதி மணக்குடியில் உள்ள புதுவயல் EB அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த ஒருபெண் அலுவலரிடம் எங்களது வீட்டின் மின் இணைப்பினை Tariff VI-லிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கான Tariff IA ஆக மாற்றுவதற்கான விண்ணப்பத்தினை கொடுத்தேன். அவர் அந்த விண்ணப்பத்தினை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு, என்னிடம், உங்கள் வீட்டினை நேரடியாக வந்து பார்த்துவிட்டுதான் Tariff Change பண்ணுவார்கள் என்று சொன்னார். நேற்று (16.07.2026) காலை சுமார்10 மணியளவில் அலைபேசி எண்.9795583803-லிருந்து எனது அலைபேசி எண்.9952302879-ல் தொடர்பு கொண்டவர், என்னிடம், புதுவயல் EB ஆபிசில் இருந்து பஞ்சு பேசுகிறேன், Tariff Change சம்மந்தமாக உங்கவீட்டை பார்ப்பதற்காக வருகிறேன், வீட்டில் இருங்கள்" என்று சொன்னார். அதன் பின்னர், காலை சுமார் 10.30 மணியளவில் வயர்மேன் திரு.பஞ்சு நாங்கள் புதியதாக கட்டியுள்ள வீட்டிற்கு வந்து பார்வையிட்டார், அப்போது அவர் என்னிடம், "வீடுகட்டி முடிச்சிட்டீங்க, Tariff Change ஆகுறதுக்கு 15 நாள் ஆகும் என்று தெரிவித்துவிட்டு, "இடத்தை

பார்வையிட்டதற்கு ரூ.500/- கொடுங்கள்" என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிடம் கையில் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், பணம் கையில இல்லைனா G-Pay பண்ணுங்க, பணம் கொடுத்தால் தான் AE சார் உங்களுக்கு Tariff Change பண்ண recommend பண்ணி அனுப்புவார் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், நேரடியாக AE சாரை பார்த்து பேசிக்கொள்கிறேன் என்று சொன்னவுடன், அவர் சென்றுவிட்டார். பின்னர், நான் நேற்று மதியம் சுமார் 2 மணியளவில் மணக்குடியில் உள்ள புதுவயல் AE ஆபிஸிற்கு சென்று, அங்கிருந்த AE திரு.சையது முகமது பாதுஷா என்பவரை சந்தித்து, அவரிடம், எனது வீட்டிற்கு Tariff Change சம்மந்தமாக விண்ணப்பித்துள்ளது பற்றியும், இன்று காலை வயர்மேன் திரு.பஞ்சு எனது வீட்டிற்கு வந்து பார்வையிட்ட பின்னர் பணம் ரூ.500/- கேட்கிறார் என்றவிபரத்தையும் கூறினேன். அதற்கு அவர் என்னிடம், "தம்பி Tariff Change பண்ணனும்னா, இடத்தை பார்த்து பரிந்துரை பண்றதுக்கு வழக்கமாக 500 ரூபாய் வாங்குவோம், ஆபிஸ்ல செலவெல்லாம் இருக்குல, ரூ.500/- கொடுத்தால் தான் 15 நாளில்ல Tariff Change பண்ணிகொடுக்கமுடியும்" என்று சொன்னார். நான் அவரிடம், சார் பணம் இப்ப கொண்டு வரவில்லை என்று சொன்னவுடன், அவர் என்னிடம், "நாளை வந்து பணத்தை என்னிடம் கொடுங்க, நான் இல்லைனா பஞ்சுக்கிட்ட கொடுங்க" என்று சொன்னார். நான் அவரிடம் நாளை வந்து பார்ப்பதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து எங்களது வீட்டின் Tariff-யை change பண்ணுவதற்கு விருப்பம் இல்லை. ஆகவே, என்னிடம் எங்களது வீட்டு மின் இணைப்பின் Tariff-யை VI-லிருந்து 1A ஆக மாற்றுவதற்கு ரூ.500/- லஞ்சம் கேட்ட புதுவயல் EB அலுவலக AE திரு.சையது முகமது பாதுஷா மற்றும் வயர்மேன் திரு.பஞ்சு ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxx. **இணைப்பு:** 1) எனது வீட்டின் மின் இணைப்பு Tariff-யை VI-லிருந்து IA ஆக மாற்றுவதற்கான விண்ணப்பத்தின் நகல், 2) வீட்டுவரி இரசீதின் நகல்.

Sir, Received the complaint on 17.07.2026 at 08.30 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai,

and registered a case in Sivagangai V&AC Crime.No.09/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 17.07.2026 at 09.00 hrs and took up for investigation. sd.R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR, அசல் புகார் மனு மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட நீதிபதி, முதன்மை மாவட்ட நீதிமன்றம் சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

17/07/26

Inspector of Police
Vigilance & Anti- Corruption
Sivagangai